பக்கங்கள்: 11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 11 திங்கட்கிழமை 27.09.2021 கதிர் 326

### இது ரகசியம் அல்ல!

அரசியல் பாரம்பரியங்கள் பெரும்பாலும் அணிகள் சார்ந்து இரத்தத்தில் ஊறியிருப்பவை.

உதாரணத்துக்கு, நாட்டின் கடந்த ஆண்டு வரை மாறி மாறி செல்வாக்குச் செலுத்தி வந்த ஐக்கிய தேசிய கட்சியை எடுத்தால், அதன் தலைவர்களின் பக்கம்02 »

## மேலும் 71 பேர் சாவு!

இலங்கையில் மேலும் 71பேர்கொரோனாவைரஸ் தொற்றால் நேற்றுமுன் தினம் சாவடைந்துள்ளனர்.

இவர்களில் 39 பெண்களும் 32 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் ☞ 11

## தாயகத்தில் தடைகளையும் தாண்டி திலீபனுக்கு உணர்வுபூர்வ அஞ்சலி

### நினைவேந்தலை முடக்க முயன்ற கோட்டா அரசின் வியூகம் தோல்வி



அஹிம்சாவாதியின் தேசம் என்றழைக்கப்படும் பாரதத்துக்கு - இந்தியாவுக்கு எதிராக அதே அஹிம்சை வழியில் போராடி வீரச்சாவடைந்த தியாக தீபம் திலீபனின் 34ஆம் ஆண்டு நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வுகள், தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் தடைகளையும் தாண்டி உணர்வுபூர்வமாக ☞ 11

## நேற்று தொற்று 1,074

இலங்கையில் நேற்று 1,074 பேர் கொரோனா வைரஸ்தொற்றுடன் அடையாளம்காணப்பட்டுள்ளனர்.

இதன்படி நாட்டில் இதுவரை 5 இலட்சத்து 13 ஆயிரத்து 605 பேர் கொரோனாத் தொற்றுடன் ☞ 11

# நீதி அமைச்சர் அலி சப்ரி அ'புரம் சிறைக்கு விஜயம்

### லொஹான் ரத்வத்தவால் அச்சுறுத்தப்பட்ட அரசியல் கைதிகளுடன் கலந்துரையாடல்



அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை நீதி அமைச்சர் அலி சப்ரி நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்று முற்பகல் அநுராதபுரம் சிறைச்சாலைக் குச் சென்ற அமைச்சர், அங்கு அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர், இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவால் ஆயுதமுனையில் அச்சுறுத்தப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்தார். ☞ 11

### வெள்ளைப்பூடு மோசடி:

## பந்துலவிடம் சி.ஐ.டி. வாக்குமூலம் பதிவு



சதொச நிறுவனத்தில் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்படும் வெள்ளைப்பூடு மோசடி சம்பவம் தொடர்பில் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். ☞ 2

## நாட்டைத் தாரைவார்க்கும் அரசுக்கு எதிராக வீதிகளில் இறங்குவோம்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சூளுரை



நாட்டின் வளங்களை தமது தனிப்பட்ட சொத்துக்களைப் போன்று விற்கும் ராஜபக்ஷ அரசுக்கு எதிராக வீதிகளில் இறங்கிப் போராட்டங்களை நடத்துவோம்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அத்துடன், தேசிய சொத்துக்களை விற்பனை செய்கின்றமைக்கு எதிராக ☞ 11

## மன்னாரில் வீதியில் காயப்போட்ட வலையில் சிக்கி இரு விபத்துகள்

### கர்ப்பிணி, குழந்தை உட்பட 4பேர் காயம்

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,செப்.27

மன்னார் மாவட்டத்தின் சவுத்பார் வீதியில் உலர வைத்திருந்த வலையில் சிக்கி இரு மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்குள்ளாகியமையில் 4 மாதக் கர்ப்பிணி மற்றும் இரண்டு வயதுக் குழந்தை உட்பட நால்வர் படுகாயமடைந்துள்ளனர். ☞ 2

## ஒக்.1 முதல் பஸ் பயணத்துக்கு புதிய விதிமுறைகள் அறிவிப்பு

ஒக்டோபர் முதலாம் திகதி நாடு திறக்கப்படுவது முதல் தனியார் பஸ்களில் பயணிகள் மற்றும் ஊழியர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர்கள் அமைப்பு வெளியிட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் முதலாம் திகதி நீக்கப்படவுள்ள நிலையில், வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட பஸ்களின் செயற்பாடு குறித்து ☞ 2

## திருமணம் உள்ளிட்ட விழாக்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கும் சுற்றறிக்கை ஒக்டோபர் 1 இல் வெளியாகும்

### இரவில் ஊரடங்கைத் தொடரவும் ஆராய்வு

நிகழ்வுகள் மற்றும் கூட்டங்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கும் புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் ஒக்டோபர் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. ☞ 2

## சுற்றிவளைப்பில் ஐவர் மாட்டினர்!

நாடளாவிய ரீதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இணைந்து மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்புகளில் பல்வேறு ☞ 2

## இனி இது ..............

இரத்தத்தில் முதலாளித்துவப் போக்கு ஊறியிருப்பதைக் காணலாம். மேற்குல சார்பு சிந்தனை – அமெரிக்க சாய்வு நிலைப்பாடு – தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்க வரை தொடர்வதை நாம் காண முடியும். ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாற்றாக வந்திருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியிலும் கூட அந்தச் சிந்தனையோட்டம் இருப்பதை நாம் அவதானிக்கலாம்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து முரண்பட்டு ஆரம்பிக்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதற்குத் தலைகீழானது. சற்று இடதுசாரி சிந்தனையோட்டம் கொண்ட அதன் தலைமைகள் அமெரிக்க முதலாளித்துவ அணுகுமுறையுடன் இணைந்து பயணிக்க அதிகம் விருப்பம் காட்டுவதில்லை. இடையில் வந்த சந்திரிகா குமாரதுங்க, மேற்குலகக் கல்வி காரணமாக இரண்டு பக்கமும் 'பலன்ஸ்' பண்ணி நடந்தாரயினும் மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன வரை சு.க. தலைவர்கள் சரியோ, பிழையோ இடதுசாரி அணிகளையும், சிந்தனையையும் அரவணைத்து நின்றவர்களே.

சு.கவிலிருந்து பிரிந்தவர்களே பொது ஜன பெரமுனவை – மொட்டுக் கட்சியை – ஸ்தாபித்தவர்கள் என்றாலும் –

இப்போது மொட்டுக் கட்சியில் தீர்மானிக்கும் சக்தியினராக இருக்கும் கோட்டபாய ராஜபக்ஷவும் பஸில் ராஜபக்ஷவும் சு.க. அரசியல் பாரம்பரியம் மிக்க ராஜபக்ஷ குடும்பத்தில் வந்தவர்கள் எனினும் –

பாரம்பரிய கட்சி ரீதியான அரசியல் முறைமைகளை உள்வாங்கி வந்த அரசியல்வாதிகள் அல்லர். 'பஞ்சத்துக்குப் பிழைக்க ஒதுங்கியவர்கள் போல' அரசியலுக்குள் கோலோச்ச வந்தவர்கள்தான். போதாதக்கு அமெரிக்காவில் பிரஜாவுரிமையைச் சுவீகரித்தவர்கள். அதனால் இயல்பான இடதுசாரி சிந்தனையற்றவர்கள்.

அவர்கள் இருவருக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அரசியல் கோட்பாட்டியல் ரீதியில் விடயங்களை அணுகுவதில் நிறைய வேறுபாடு உண்டு.

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையப் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு கைமாற்றிய விடயத்தில், காலாதி கால சுதந்திரக்கட்சி உறுப்பினர்களின் சிந்தனைப் போக்கு மற்றும் அணி சேர்ந்திருக்கும் இடதுசாரிகளின் நிலைப்பாடு போன்றவற்றைக் கணக்கில் எடுக்கும் அரசியல் ஞானமோ, கொள்ளை ரீதியான சிந்தனையோட்டமோ கோட்டாவுக்கும் இல்லை, பஸிலுக்கும் இல்லை. அதனால்தான் அதனை வெகு 'ஸிம்பிளாக' அவர்கள் எடுத்து, காய் நகர்த்தியிருக்கிறார்கள்.

ஆனால் விடயம் சுலபமாக அடங்கப் போவதாகத் தெரியவில்லை. ஆளும் கட்சிக்குள் விவகாரம் பலத்த சூடுபிடித்துள்ளது.

இந்தப் பிரச்சினை குறித்துப் பேசுவதற்காக அரசுக் கூட்டமைப்புக் கட்சிகளின் தலைவர்கள் பிரதமரைத் தொடர்பு கொண்டு, நேரம் ஒதுக்கி, அவருடன் பேசப் போனால், அங்கு முந்திக் கொண்டு நிதி அமைச்சர் பஸில் நந்தி மாதிரிக் குந்திக் கொண்டு இருக்கின்றார்.

அதனால் கூட்டுக் கட்சிகளின் தலைவர்களினால் பிரதமருடன் மனம் திறந்து பேச முடியவில்லை. அவர்களின் குற்றச்சாட்டுகள் பஸிலுக்கு எதிரானவை. பஸிலுக்கு எதிராக முறைப்பாடு செய்ய வந்தால் அங்கு பஸிலே குந்திக் கொண்டிருந்தால் என்ன செய்வது? வெளியே வந்து, பேச்சு முயற்சி – சமரச எத்தனம் – தோல்வி என்று அறிவித்து விட்டு, வெளியேறினார்கள் கூட்டுக் கட்சிகளின் தலைவர்கள்.

இவ்விடயத்தில் கூட்டுக் கட்சிகளின் தலைவர்களுடன் சு.கவின் எம்.பிக்களும் இப்போது சேர்ந்து கொண்டமையை அடுத்து பஸிலுக்கு எதிரான உள்கலவரம் தீவிரமடைந்துள்ளது.

இதனையடுத்து சு.கவின் எம்.பிக்கள் பதினான்கு பேருக்கும் ஓர்அழைப்புக் கடிதம் வந்தது.

கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் அவரினதும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினதும் கூட்டுத் தலைமையில் சு.கவின் எம்.பிக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் ஒன்று நடைபெற இருப்பதாகவும் அதில் பங்குபற்றும்படியும் சு.கவின் எம்.பிக்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

கெரவப்பிட்டிய மின் நிலையப் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு விற்றமை தொடர்பில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மேற்படி சு.கவின் எம்.பிக்களுக்கு விளக்கமளித்து அவர்களை சமாளிப்பதுதான் கூட்டத்தின் நோக்கம்.

வார இறுதியில் நடைபெற வேண்டிய இந்தக் கூட்டத்துக்கு சு.கவின் எம்.பிக்கள் யாரும் வரவேயில்லை. கூண்டோடு பகிஷ்கரிப்பு. அதனால் கூட்டம் நடத்தி சு.கவின் தரப்பை சமாளிக்கும் பஸிலின் முயற்சி பிசுபிசுத்துப் போய்விட்டது.

இந்த விடயத்தில் நிதி அமைச்சர் பஸில் மட்டுமல்லர், அரசுத் தலைமையே நெருக்கடியில் என்பதுதான் களநிலைமை.

கூட்டுக் கட்சிகளை அரவணைத்தபடி இந்த நெருக்கடியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எப்படிச் சமாளித்துத் தாண்டப் போகின்றார்?

இவ்வாரத்தில் விடை கிடைக்கலாம். பார்ப்போம்.

**- மின்னல் -**

## திருமணம் உள்ளிட்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பான புதிய சுகாதார வழிகாட்டல் சுற்றறிக்கையை சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட அசேல குணவர்த்த வெளியிடுவார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறைந்த எண்ணிக்கையிலான மக்கள் பங்கேற்கும் விழாக்களை வீடுகளில் மட்டுமே நடத்த அனுமதிக்க சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது.

புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் மூலம் இறுதிச் சடங்குகள் மற்றும் பல பொதுக் கூட்டங்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டு கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு ஒக்டோபர் முதலாம் திகதி நாடு மீண்டும் திறக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.

கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நாட்டை மீண்டும் திறக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், இரவில் ஊரடங்கு உத்தரவை நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன்படி, தினமும் இரவு 10 மணி முதல் மறுநாள் அதிகாலை 4 மணி வரை ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்படும் என்று அறியமுடிந்தது.

## சுற்றிவளைப்பில் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றங்களுடன் தொடர்புடைய 5 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெபிலியவல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 5 கிராம் 400 மில்லிகிராம் 51 வயது நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குட்டிகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட 209 புகைத்தல் பொருட்களுடன் 44 வயது நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 61ஆம் மைல்கல் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், 120 கிராம் கேரள கஞ்சாவுடன் 35 வயது நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

களனிப் பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 10 கிராம் ஹெரோய்னுடன் 33 வயது நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, மதுபான சுற்றிவளைப்பொன்றில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 15 லீற்றர் மதுபானமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

## ஒக்.1 முதல் பஸ் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு தம்புள்ளையில் நேற்று இடம்பெற்றது. இதன் போதே பஸ்களில் பயணிகள் மற்றும் ஊழியர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி அறிவிக்கப்பட்டுள்ள புதிய விதிமுறைகளாக –

* ஒக்டோபர் முதலாம் திகதி முதல் தனியார் பஸ்களில் பணிபுரியும் ஊழியர்கள் கொவிட் தடுப்பூசியின் 2 டோஸ்களையும் பெற்றிருப்பது கட்டாயமாகும்.

* பஸ் ஊழியர்கள் மற்றும் பயணிகள் முகக்கவசம் அணிவது கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது. பஸ் நடத்துனரே அதற்குப் பொறுப்பாக இருக்க வேண்டும்.

* ஆசன எண்ணிக்கைகளுக்கு அமைய மாத்திரமே பயணிகள் பயணிக்க வேண்டும்.

* அரச மற்றும் தனியார் துறைகளில் பணி புரிகின்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

* கூடுதலான கட்டணம் அறவிடக் கூடாது.

* பஸ்களில் யாசகம் பெறுவது தடை செய்யப்பட்டுள்ளது.

* பஸ்களில் வெற்றிலை மெல்லுதல் மற்றும் புகைப்பிடித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. அதன் முழுப் பொறுப்பும் நடத்துனருக்கே உள்ளது.

* இந்தப் புதிய விதிமுறைகளை நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதில் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் பரிசோதகர்கள் நாடு முழுவதும் சிவில் உடையில் சேவையில் ஈடுபடுத்தப்படுவர்.

– ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன.

## மன்னாரில் வீதியில் ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் சவுத்பார் வீதியில் உலரவிடப்படும் வலைகளில் சிக்கி விபத்துகள் ஏற்படுகின்றன எனச் சுட்டிக்காட்டப்பட்டு வந்தும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படாதமையினால் நேற்றும் இரு விபத்துக்கள் இடம்பெற்று நால்வர் படுகாயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு படுகாயமடைந்த 36 வயதையுடைய செந்தூரன், 29 வயதான வித்தியா , இரண்டு வயதுக் குழந்தையான ஜீவிரோசன் மற்றும் 39 வயதுடைய அனெக்சன் விக்டர் ஆகியோரே தற்போது மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வீதியில் வலையையலரப் போடுவது தொடர்பில் நகர சபை, கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் ஆகியவற்றிடம் பல முறை முறையிட்டும் தீர்வு கிட்டாதமையினால் தற்போது மாவட்டச் செயலாளரின் கவனத்திற்கு விடயம் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்படும் தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது –

வலையை எக்காரணம் கொண்டும் வீதியில் போட முடியாது என பல தடவை அறிவுறுத்தியும் இந்தச் சம்பவம் தொடர்வதனால் பொலிஸாரினதும் மாவட்டச் செயலாளரினதும் கவனத்திற்கு இவ்விடயம் தற்போது கொண்டு செல்லப்பட்டுள்ளதாக – அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## பந்துலவிடம் சி.ஐ.டி. ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 24 ஆம் திகதி, அமைச்சரிடம் குற்றப்புலனாய்வு அதிகாரிகள், நான்கு மணித்தியாலங்கள் வாக்குமூலத்தைப் பதிவு செய்தனர் என்று வர்த்தக அமைச்சு ஊடக அறிக்கையை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

வெள்ளைப்பூடு கொள்கலன்கள் இரண்டை சதொச நிறுவனம் வேறு தரப்பினருக்கு விற்பனை செய்தமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தபோது, நுகர்வோர் அதிகாரசபை பணிப்பாளர் அது தொடர்பான விசாரணைகளில் அரசியல் தலையீடுகள் இருக்கின்றன எனவும், மற்றும் தன்னை அமைச்சர் பந்துல குணவர்தன அச்சுறுத்தினார் எனவும் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

இந்நிலையில், தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு பொய்யானது என்றும், இது தொடர்பில் விசாரணை நடத்துமாறும் அமைச்சர் பந்துல குணவர்தன பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்திருந்தார்.

இதன்படியே அமைச்சரிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளனர்.

# சென்றான் எம் உளம் நொருங்க



அமரர்

சங்கீத, மிருதங்க கலாவித்தகர், இசைக்கலைமணி

## வர்ணகுலசிங்கம் இராமேஸ்வரன்

**இன்னிசை வேந்தன், நல்ல**
**இங்கிதம் தெரிந்த அன்பன்,**
**புன்னகை அரசன், மண்ணின்**
**புனிதத்தை இசைத்த.. ஈழ**
**அன்னையின் தவப் புதல்வன்!**
**அதிசயம் விளைப்பான் இன்னும்**
**இன்னுமென்**
**றிருந்தோம்...சென்றான்!**
**எம் உளம் நொருங்க...போனான்!**
**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

27.09.2021 நல்லூர் சைவ தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல்

காலைக்கதிர் Kalaikkathir

# வெடி பொருள்களுடன் கைதான இளைஞருக்கு விளக்கமறியல்

திருகோணமலை - நிலாவெளி பகுதியில் சட்டவிரோத வெடிபொருள்களுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்றத்தில் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபரை ஆஜர்படுத்திய போதே இவ்வாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் நிலாவெளி பகுதியைச் சேர்ந்த எம்.எப்.எம்.றியாஜ் (வயது - 38) எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிலாவெளி பிரதேசத்திலிருந்து இறக்கக்கண்டி பகுதிக்கு ஓட்டோவில் 27 டைனமைட் மற்றும் 490 டெட்டனேட்டர்களைக் கொண்டு செல்லும் போது மேற்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் நிலாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சந்தேகநபர் சட்டவிரோத வெடி பொருள்களை மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் மீனவர்களுக்கு விற்பனை செய்வதற்காக கொண்டு சென்றார் எனவும், ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளர்களைக் கண்டதும் ஓடி ஒளிந்த இராஜாங்க அமைச்சர்







மட்டக்களப்பில் நிகழ்வொன்றில் கலந்துக் கொண்ட இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே ஊடகவியலாளர்களை கண்டு ஓடி ஒளிந்த சம்பவமொன்று கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் பா.சந்திரகுமாரின் அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை பொதுஜன பெரமுன கட்சியின் கூட்டமொன்று நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான லொஹான் ரத்வத்தே, எஸ்.வியாழேந்திரன் மற்றும் திருகோணமலை மற்றும் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதன்போது இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே ஊடகவியலாளர்களைக் கண்டதும் ஒளிந்து சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொவிட் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் மட்டக்களப்பில் சுகாதாரத் துறையினர் கொவிட் பரவலைத் தடுப்பதற்குப் போராடிவரும் நிலையில் பெருமளவானோரின் பங்குபற்றுதலுடன் இந்தக் கூட்டம் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, குறித்த நிகழ்வில் கலந்து கொள்ள ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# பிரித்தானிய பிரஜை ஒருவர் மர்மமான முறையில் சாவு

அருகம்பை பகுதியில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த பிரித்தானிய நாட்டவர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 43 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் கூறியுள்ளனர். உயிரிழந்த நபர் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் தனது மனைவியுடன் இலங்கை வந்துள்ளார். ஹிக்கடுவை பகுதியில் தங்கியிருந்த அவர், கடந்த 22 ஆம் திகதி தனது சாரதியுடன் அவர் அருகம்பைக்குச் சென்றுள்ளார். 22 ஆம் திகதி இரவு வேறொரு விடுதியில் இடம்பெற்ற விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட அவர் மறுநாள் தான் தங்கியிருந்த விடுதிக்கு திரும்பியுள்ளார். இந்நிலையில், குறித்த நபரின் தொலைபேசி இணைப்பில் இல்லாததால் அது தொடர்பில் உயிரிழந்த நபரின் மனைவி சாரதிக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து, சாரதி அவரது அறைக்குச் சென்று பார்த்தபோது, அவர் உயிரிழந்திருந்தமை தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் நீதிவானால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதையடுத்து, சட்டவைத்திய அதிகாரியும் சம்பவ இடத்தைப் பார்வையிட்டுள்ளார்.

பின்னர் உயிரிழந்தவரின் சடலம் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு, கொவிட் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், சம்பவம் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

# முரண்பட்ட கருத்துக்கள் தெரிவித்து போராட்டத்தை முடக்கவே முடியாது

## இலங்கை ஆசிரியர் சங்கம்

அதிபர் - ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கான போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்கொண்டு செல்வோம். கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேராவைப் போன்று முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவித்து எமது போராட்டத்தை யாராலும் முடக்க முடியாது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன. அழகியல் துறை மாணவர்களுக்கான சாதாரண தர செயன்முறை பரீட்சையை நடத்த வேண்டியுள்ளது. இவ்வாறான நிலையில் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்த தீர்மானத்தை எடுக்கும் போது அதிபர் ஆசிரியர்களுக்கே முன்னுரிமையளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வைவழங்காது, அவர்களைப்புறக்கணித்து அரசாங்கம் அடுத்தடுத்த நடவடிக்கைகளை எடுக்குமாயின் இறுதித் தீர்வைக் காண முடியாது.

எனவே அதிபர் - ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் கல்வி அமைச்சு, அரசாங்கம் முரண்பட்ட பேச்சுகளை நிறுத்தி சரியான தீர்வை எட்ட வேண்டும் என்பதே எமது வலியுறுத்தலாகும். - என்றார்.

# ஞானசார தேரருக்கு எதிராக இரண்டு முறைப்பாடுகள் பதிவு

அண்மையில் ஒளிபரப்பான இரண்டு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் வெளியிட்ட தகவல் தொடர்பாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக பொலிஸ் மா அதிபரிடம் இரண்டு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த முறைப்பாடுகளை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மற் றும் சிவில் செயற்பாட்டாளரான நிசார் மௌலான ஆகியோர் முன்வைத்துள்ளனர்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி இறைவன் அல்லாஹா எனக் கூறி அவமதித்து, இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்துக்கு தடையேற்படுத்தியுள்ளமை, எதிர்காலத்தில் நடக்க உள்ள அடிப்படைவாத பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான தகவல்கள் தன்னிடம் இருக்கின்றன எனக் கூறினாலும் அவற்றை பாதுகாப்பு தரப்பினருக்கு வழங்காததன் மூலம் தகவல்களை மறைத்தமை ஞானசார தேரருக்கு எதிராக பொலிஸ் மா அதிபரிடம் இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலைப் போன்ற பயங்கரவாதத் தாக்குதல் ஒன்று எதிர்காலத்தில் நடத்தப்பட உள்ளதாகவும் அது பற்றிய அனைத்துத் தகவல்களும் தன்னிடம் இருக்கின்றன எனவும் அதனை சாட்சியங்களுடன் ஒப்புவிக்க முடியும் எனவும் ஞானசார தேரர் குறிப்பிட்டிருந்தார்.

# சாதாரணதரப் பரீட்சையில் இரு கைதிகள் சித்தியடைவு

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய சிறைக் கைதிகள் இருவர், உயர் தரம் கற்பதற்கான தகுதியுடன் சித்தியடைந்துள்ளனர் என சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் சிறைச்சாலைகள் ஆணையாளர் (நிர்வாகம் மற்றும் புனர்வாழ்வு) சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

புலிகள் இயக்கத்துடன் தொடர்ப்புபட்டார் என மகசின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவரும் மற்றொரு கைதியுமே இவ்வாறு சித்தியடைந்துள்ளார் என அவர் மேலும் கூறினார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட சாதாரண தரப் பரீட்சைக்கு சிறைச்சாலையிலிருந்து 4 கைதிகள் தோற்றியுள்ளனர். மகசின் சிறை மற்றும் வட்டரெக சிறைச்சாலை ஆகிய பரீட்சை நிலையங்கள் ஊடாக இவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

இந் நிலையிலேயே அவர்களில் இருவர் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தடுப்பூசி பெற்ற பின்னர் சிறுவர்களுக்கு வேறு நோய் அறிகுறி இருந்தால் அறிவிக்குக

தொற்றா நோய்கள் மற்றும் விசேட தேவையுடைய சிறார்களுக்கு செலுத்தப்படும் பைசர் தடுப்பூசி காரணமாக, வேறு ஏதேனும் நோய் அறிகுறிகள் ஏற்படுமானால் அது தொடர்பாக அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு ரிப்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் தொலைபேசி இலக்கமான 0702703954 என்ற இலக்கத்துக்கு அறிவிக்குமாறு வைத்தியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விசேட தொலைபேசி இலக்கம் 24 மணிநேரமும் செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டதன் பின்னர், காய்ச்சல் ஏற்படுமாயின், பெரசிடமோல் வில்லையொன்றைக் குடிக்குமாறு வைத்தியர்கள் கூறுகின்றன.

அத்துடன், களைப்பு ஏற்படும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபட இடமளிக்க வேண்டாம் என விசேட வைத்திய நிபுணர் ஷ்யாமன் ரவிந்திரஜித் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசுக்குள் குழப்பம் ஏன்?

**கெரவலப்பிட்டிய யுகதவானி மின் உற்பத்தி நிலையத்தில் கரையோர இயற்கை எரிவாயு சேமிப்புக் களஞ்சியம் மற்றும் மறுசீரமைப்பு முனையம் ஒன்றை அமைக்கும் நடவடிக்கைக்காக அந்த உற்பத்தி நிலையத்தின் நாற்பது வீதப் பங்குகளை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு விற்கும் ஒப்பந்தம் ஒன்றை அதிரடியாக – வெளியே தெரியாமல் – அவசர அவசரமாக அரசு செய்துகொண்டிருப்பது தொடர்பான சர்ச்சை அரசுக்குள் பெரும் பூகம்பமாக வெடிக்கும் சூழ்நிலைகள் வெளிப்படுகின்றன.**

**அரசுக் கூட்டணியின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுன தவிர்ந்த – மற்றைய பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி உட்பட பன்னிரண்டு கட்சிகள் – ஒன்று சேர்ந்து அரசின் முடிவுக்கு எதிராகக் கிளர்ந்து நிற்கின்றன.**

**வெளிநாடு சென்றிருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாடு திரும்பியதும் அவர்கள் கூட்டாக ஒன்றுபட்டுச் சென்று அவரிடம் இது குறித்து முறைப்பாடு செய்திருக்கிறார்கள். எனினும் தீர்வு கிடைக்கவில்லை. ஜனாதிபதி கோட்டாபய ரஜபக்ஷ நாடு திரும்பியதும் பேசிமுடிவெடுக்கலாம் என்ற சாரப்பட நெருக்கடித் தீவிரத்தைச் சற்றுத் தணித்துத் தள்ளி வைத்திருக்கின்றார் பிரதமர்.**

**ஜனாதிபதி கோட்டாபய நாடு திரும்பியதும் இந்த விடயம் மீண்டும் சூடு பிடிக்கும். அது வரை நீறுபூத்த நெருப்பாகவே அது கிடக்கும். எனினும் எதிர்க்கட்சிகள் அவ்வப்போது காற்றை ஊதி, சூடு கிளப்பி, விடயத்தை உசுப்பேத்தி, நீறு பூக்காமல், சுவாலை விட்டு நெருப்பு எரிவதை உறுதிப்படுத்தும் விதத்தில் காரியங்களை ஆற்றிக் கொண்டிருக்கின்றனர் என்பதும் கவனிக்கத்தக்கது.**

**அந்த வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேயவர்த்தன சில கருத்துக்களைக் கூறி உசுப்பேற்றியிருக்கின்றார்.**

**ஆட்சித் தரப்பின் ஏனைய அமைச்சரவை சகாக்களோடு சரியான விதத்தில் கலந்துரையாடாமல், இந்த ஒப்பந்த விவகாரத்தைத் தன்னிச்சையாகவும், தனது தனித்த எண்ணவோட்டத்திலும், விடயங்களை நகர்த்தி நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஒருதலைப்பட்சமாக செய்திருக்கின்றார் என்பதே மற்றைய அமைச்சர்களின் குற்றச்சாட்டு.**

**அமைச்சர்கள் வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் இதில் முன்னிலையில் நிற்கின்றனர்.**

**ஆனால், இந்த விடயத்தில் சில அமைச்சர்கள் தங்கள் பொறுப்பைத் தட்டிக் கழிப்பது ஏமாற்றுவித்தை – பித்தலாட்டம் – நாடகம் – என்று ஐ.தே.கட்சியின் வஜிர அபேயவர்த்தன கூறுகின்றார்.**

**“இந்த ஒப்பந்தத்துக்கான அமைச்சரவைப் பத்திரம் செப்ரெம்பர் 9 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படுகின்றது. அக்கூட்டத்தில் இந்தப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருப்பதான கூட்ட அறிக்கை அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் செப்ரெம்பர் 18ஆம் திகதிதான் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கின்றது. எனவே இந்த விடயத்தில் அனைத்து அமைச்சர்களும் பொறுப்புத்தான். யாரும் கூட்டுப் பொறுப்பில் இருந்து தப்பிக்கவோ, விலகவோ முடியாது” – என்கின்றார் வஜிர அபேய வர்த்தன.**

**இந்தக் திட்டத்தின் மூலம் இடையில் தரகுப் பணம் சுற்றியது யார் என்பதுதான் கேள்வி. அதனால்தான் இந்த சர்சை. அமைச்சர்களும் தங்களுக்குள் நாடகம் நடத்துகின்றனர் என்று ஐ.தே. கட்சி குற்றம் சுமத்துகின்றது.**

**அதுவேதான் உண்மை போலவும் தோன்றுகின்றது. ராஜபக்ஷக்கள் ஆட்சியில் இதெல்லாம் தவிர்க்க முடியாத வழமைதான்.**

# பொருள்களின் விலையை தொடர்ந்து அதிகரித்தால் நுகர்வோர் பெரும் சுமையை எதிர்கொள்ள நேரிடும்

## நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, செப். 27

கோதுமை மா மற்றும் இறக்குமதி செய்யப்படும் பால் மா ஆகிய அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விலையை மீண்டும் மீண்டும் அதிகரித்தால் நுகர்வோர் பெரும் சுமையை எதிர்கொள்ள நேரிடும்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்குவதை விடுத்து அவர்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் செயற்படுவது முற்றிலும் தவறானது என நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

நுகர்வோர் அதிகார சபை வியாபாரிகளின் பக்கம் இருந்து செயற்படாமல் நுகர்வோர் தரப்பில் இருந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர்மேலும் குறிப்பிடுகையில் -

கோதுமை மா, இறக்குமதி செய்யப்படும் பால் மா மற்றும் சீமெந்து ஆகியவற்றின் விலையை அதிகரிக்குமாறு இறக்குமதியாளர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

இறக்குமதி செய்யப்படும் பால் மா ஒரு கிலோகிராமின் விலையை 200 ரூபாவால் அதிகரிக்க நிதியமைச்சு கடந்த வாரம் இணக்கம் தெரிவித்தது. பின்னர் அத்தீர்மானம் இடை நிறுத்தப்பட்டது.

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலையை 10 ரூபாவால் அதிகரிக்க அமைச்சரவை உபகுழு கூட்டத்தின்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டதாக அறிய முடிகியது.

கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டால் வெதுப்பக உற்பத்தி உணவுப் பொருள்களின் விலை அதிகரிக்கக் கூடும்.

எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து பாண் ஒரு இறாத்தலின் விலை 5 ரூபாவாலும், பனிஸ் உள்ளிட்ட உணவுப் பொருள்களின் விலை 10 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான பின்னணியில் கோதுமை மாவின் விலையும் அதிகரிக்கப்பட்டால் அதன் சுமையை நுகர்வோர் எதிர்கொள்ள நேரிடும்.- என்றார்.

# உணர்ச்சிக் கவி வர்ண ராமேஸ்வரன் கனடாவில் கொரோனாவால் மரணம்!



தமிழர் தாயகத்தில் பல விடுதலைப்பாடல்களை பாடிய விடுதலைக் கலைஞர், இசைக் கலை மாமணி வர்ணராமேஸ்வரன் கடந்த சனிக்கிழமை கொரோனாவால் உயிரிழந்தார்.

உணர்ச்சி ததும்பும் தாயகப்பாடல்களைப் பாடிய பாடகர், சங்கீத, மிருதங்க கலாவித்தகரும் இசைக்கலாமணியுமான வர்ண ராமேஸ்வரனின் இழப்பு ஈழத் தமிழ் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இவரது ‘தாயகக்கனவுடன்...’ என்ற மாவீரர் துயிலுமில்லப்பாடல் கல்லறையிலிருக்கும் சமராடி மரணித்து தாயகக் கனவுடன் உறங்கும் ஆத்மாக்களை எழுச்சிகொள்ளச் செய்கின்ற உணர்வுததும்பும் வீர வரிகளைக் கொண்டவை. இவர் தமிழ்த் தேசியத்துக்கும் தமிழர் போராட்ட வீர வரலாற்றுக்கும் ஒரு புத்துணர்வை அளித்த ஈழத்துப் பெருங்கலைஞர் ஆவார்.

கொரோனாத் தொற்றினால் ரொறோன்ரோ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாகன இறக்குமதிகளுக்கான கட்டுப்பாடுகளை நீக்க திட்டம்

இலங்கைக்கு அந்நிய செலாவணி வருவதைக் கருத்தில் கொண்டு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான தடையை பரிசீலிக்கலாம் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு வரும் அந்நிய செலாவணியை கருத்திற் கொண்டு வாகன இறக்குமதியை மாத்திரமன்றி தற்போது இறக்குமதி தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை எதிர்வரும் காலங்களில் நீக்குவதற்கு எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச வர்த்தக சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட இணையத்தள கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கை தற்போது வெற்றிகரமாக கொவிட் தடுப்பூசி வழங்கி வருவதால் விரைவில் சுற்றுலாத் துறையை மீண்டும் ஆரம்பிக்க முடியும்.

இறக்குமதிக்கு முக்கிய காரணமாக இருக்கும் தொழிற்சாலைகளை வழமையை போன்று நடத்தி செல்ல முடிந்தால் நாட்டில் மீண்டும் அந்நிய செலாவணி அதிகரிக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் பால் மா தட்டுப்பாடு மேலும் ஒரு மாதம் நீடிக்கும்

இலங்கையில் பால் மாவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு மேலும் ஒரு மாத காலப்பகுதிக்கு நீடிக்கும் அபாயம் உள்ளதாக பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு கிலோ பால் மாவின் விலையை 200 ரூபாவால் அதிகரிக்க வாழ்க்கை செலவுக் குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்குள் விலை உயர்வு ஏற்படவில்லை என்றால், பால் மா விநியோகம் இயல்பு நிலைக்கு திரும்புவதற்கு மேலும் ஒரு மாதமாகும் என பால் மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

துறைமுகத்தில் உள்ள பால் மாவை விரைவில் விடுக்கவில்லை என்றால் விரைவில் பழுதடைவதற்கு வாய்ப்புகள் உள்ளன. தற்போது கடைகளில் பால் மா கோரிக்கைக்கமைய நூற்றுக்கு 10 வீதம் மாத்திரமே உள்ளதென பால் மா இறக்குமதியாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

டொலர் பற்றாக்குறையால் பால் மா இறக்குமதியாளர்களால் இறக்குமதி செய்யப்பட்ட மிகப்பெரிய அளவு பால் மா கொள்கலன்களை வெளியிட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

துறைமுகத்தில் சிக்கியுள்ள பால் மா கொள்கலன்களை விடுவிக்குமாறு பிரதமர் அறிவுறுத்தியுள்ள போதிலும் கொடுப்பனவுகள் செலுத்துவதற்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

டொலருடன் ஒப்பிடும் போது பால் மாவின் விலையை 200ரூபாவால் அதிகரித்தால் பாரிய நட்டம் ஏற்படுவதால் 350 ரூபாவால் அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்தோம். எனினும் இந்த நிலைமைக்கு மத்தியில் மீண்டும் 6 மாதங்களிலேயே விலை அதிகரிக்கப்படும் என பால் மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் லக்ஷ்மன் வீரசூரிய மேலும் தெரிவித்துள்ளார்.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

அங்கம் - 88

ந.வித்தியாதரன்

தமிழீழப் போராட்டத்தின் உயிர்ப்பான வெளிப்பாடுகளில் ஒன்று தமிழரசு முத்திரை வெளியீடு எனக் குறிப்பிட்டு அந்த முத்திரையைத் தயாரித்து வெளியிட்டு, அந்தப் போராட்டத்தின் ஆரம்பத்தில் காத்திரமாகப் பங்களித்தவர் சிவநாயகம் ஐயா என்று தெரிவிக்கும் கட்டுரை ஒன்று நான் ஆசிரியராக இருந்த 'சுடர்ஒளி' பத்திரிகையில் 16 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியாகி இருந்தது. கட்டுரையை எழுதியவர்




'எஸ்.ஏ.ஆர்.' - அந்தப் புனை பெயரில் அதை வரைந்தவர் யார் என்பதை நான் மறந்துவிட்டேன். என்றாலும் 1960 களின் கடைசியில் தமிழர்களுடைய அஹிம்சை வழிப் போராட்டம் சட்டமறுப்பு இயக்கமாகப் பீறிட்ட காலகட்டத்தைப் பற்றி அந்தக் கட்டுரை விவரிக்கின்றது. இன்றைய தலைமுறை அந்த விடயங்கள் கட்டவிழ்ந்த சூழலை நோக்குவதும் கூட பொருத்தமானது என்பதால் அதனை இத்தொடரில் தருகிறேன். இனி கட்டுரைக்குள் நுழைவோம்,

வாருங்கள்:-

1961 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நாடுபூராவும் நீதிமன்ற அலுவல்கள் தனிச்சிங்களத்திலேயே நடைபெறும் என்று அர்சு அறிவித்தது. அதுமட்டுமல்ல. பாடசாலைகளையும், ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளையும் தேசிய மயப்படுத்தும் சட்டமூலத்தை செயற்படுத்த முன்வந்தது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களத்தைப் போதிக்க ஆசிரியர்களை அனுப்பி வைக்கவும் அரசு முடிவெடுத்தது.

அரசின் தீர்மானங்கள் இலங்கை முழுவதும் பதற்றத்தை ஏற்படுத்தின. இனியும் பொறுக்க முடியாது என்று கூறிய தமிழரசுக்கட்சி, 1960 டிசெம்பர் 18 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கூடி - வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அரசுக்கு எதிராக ஹர்த்தால் நடத்தத் தீர்மானித்தது.

## வடக்கு, கிழக்கில் ஹர்த்தால்

1961 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி வடக்கு - கிழக்கில் ஹர்த்தால் அமைதியாக நடந்து முடிந்தது. அதை அடுத்து வடக்கு - கிழக்கு அரச அலுவலகங்களின் முன்பு மறியல் போராட்டம், அரசுக்கு ஆதரவாகச் செயற்படும் அரச ஊழியர்களோடு ஒத்துழையாமை, வடக்கு கிழக்குப் பாடசாலைகளில் சிங்கள மொழி பயிற்றுவிப்பதை எதிர்த்தல் என்று நேரடி நடவடிக்கைகளில் தமிழரசுக்கட்சி இறங்கியது.

ஜனவரி 21 ஆம் திகதி நடந்த தமிழரசுக்கட்சியின் ஏழாவது தேசிய மாநாட்டில் பட்டிருப்பு நாடாளுமன்றப் பிரதிநிதி எஸ். இராசமாணிக்கம் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த மாநாட்டில், செயற்படவேண்டிய காரியங்களை எடுப்பதற்கு நடவடிக்கைக் குழுவுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. பெப்ரவரி 20 ஆம் திகதியிலிருந்து சட்ட மறுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கைக் குழு தீர்மானித்தது.

அதற்கு ஏற்றவாறு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழரசுத் தலைவர்களும் தொண்டர்களும் பிரசாரங்களில் ஈடுபட்டனர்.

சிங்கள மொழியில் காரியங்கள் ஆற்ற வேண்டாம் என வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு தந்தை செல்வாவின் கையொப்பத்துடன், உருக்கமான வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கை சுதந்திரம் அடைந்த நாள். வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அன்றைய தினம் துக்க தினமாக அனுஷ்டிக்கப்பட்டது. நீதிமன்றங்களில் சிங்களத்தைக் கட்டாயப்படுத்துகின்ற சட்டத்தின் நகலும், இலங்கை அரசமைப்பு நகலும், சவப்பெட்டிகளாக உரும்பிராய் சந்தியிலிருந்து ஆயிரக்கணக்கானோர் தொடர்ந்து வர ஊர்வலமாக யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு எரிக்கப்பட்டன.

## கச்சேரி முன் சத்தியாக்கிரகம்

பெப்ரவரி 20 ஆம் திகதி அடுத்த கட்ட நடவடிக்கையாக அரச கச்சேரிகளுக்கு முன்னால் சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெற்றது. தினமும் ஆயிரக்கணக்கில் மக்கள் ஒத்துழைப்பு நல்கினர். முதல் நாள் காலை 7.30 மணிக்கு கச்சேரி வாசலில் தந்தை செல்வா தலைமையில் தலைவர்கள் மறியல் நடத்தினர். காலை 7.45 மணிக்கு யாழ். பொலிஸ் சுப்பிரிண்டென்டன்ட் தலைமையில் வந்த பொலிஸ்படை குந்தி இருந்த தலைவர்களைத் தூக்கி அகற்றியது. ஆனால் அகற்றப்பட்ட தொண்டர்களின் இடத்தில் அணியணியாகத் திரண்டுவந்த தொண்டர்கள் அமர்ந்து கொண்டனர். ஒன்றும் செய்ய இயலாமல் பொலிஸ் அந்த இடத்தை விட்டு அகன்றது.

வடக்கு - கிழக்கு மாகாண அரச கச்சேரிகளுக்கும் ஹர்த்தால் பரவி, பல மாதங்கள் இந்த மாகாணங்களில் அரசு இயந்திரத்தை ஸ்தம்பிக்க செய்தது.

இந்த நிலையில் அரச பிரதிநிதிகளாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சௌமியமூர்த்தி தொண்டமானும், எஸ்.டி. பண்டாரநாயக்கவும் சீரழிந்து வரும் சூழ்நிலை பற்றி நேரில் கண்டறிந்து அரசுக்கு அறிவித்தனர். என்றாலும் அரசு அசைந்து கொடுக்கத் தயாராக இருக்கவில்லை. விட்டுக்கொடுத்து சிங்கள இனவாதிகளின் எதிர்ப்பை சந்திக்க அரசு தயாராக இல்லை.

இந்த நிலையில் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மார்ச் 25 இல் வானொலியில் பேசுகையில், சத்தியாக்கிரகத்தைக் கைவிட்டு பேசித்தீர்க்கலாம் வாருங்கள் என்று தமிழ்த் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார். தமிழரசுக்கட்சி கூடிப் பேசி, பிரதமரின் அழைப்பு நம்பகமானதல்ல என்று முடிவெடுத்து, அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு ஆயத்தமானது. அடுத்த கட்ட நடவடிக்கையாக நாட்டின் சட்டதிட்டங்களை மீறி செயற்படுவது என்ற தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## அரசுக்கு சவாலாக தபால் சேவை

முதலாவதாக தபால் சட்டத்தை மீறுவது என்றும், அதன் பிரகாரம் வடக்கு - கிழக்கில் தபால் சேவையை தாமே நடத்துவது என்றும் தமிழரசுக்கட்சியின் நடவடிக்கைக் குழு தீர்மானித்தது.

இதற்கு யோசனை தெரிவித்தவர்களில் 'தமிழரசுக்கட்சியின் மூளை' என்று அழைக்கப்பட்ட காவலூர் நவரத்தினம் முதன்மையானவர்.

அந்த நேரத்தில் தமிழரின் போராட்டத்துக்கு ஆதரவு அளித்து, எழுச்சிமிக்க கட்டுரைகளை வெளியிட்டுக் கொண்டிருந்த ஒரே பத்திரிகை தமிழரசுக் கட்சியின் பத்திரிகையான 'சுதந்திரன்' ஆகும். அதன் ஆசிரியராக இருந்தவர் அமரர். எஸ்.டி.சிவநாயகம் அவர்கள். தந்தை செல்வாவின் மதிப்பும், காவலூர் நவரத்தினம் ஐயாவின் நட்பும் உள்ள எஸ்.டி.சிவநாய



கம் அவர்களிடம்தபால் சேவை நடத்துவதற்கான முத்திரைகளை உருவாக்கி, அச்சடித்து, யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கும் பொறுப்பு வழங் கப்பட்டது. இந்த விடயம் சட்டவிரோதமானதாகையால் மிகவும் இரகசியமாக நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றாக இருந்தது.

எனவே, சிவநாயகம் அவர்கள் இந்தத் திட்டத்தில் தன்னையும் தனது ஆருயிர் நண்பரான சுதந்திரன் செய்தி ஆசிரியரையும் மட்டுமே வைத்துக்கொண்டார். சிவநாயகம் ஒரு புகைப்படக் கலைஞர். எனவே வீட்டில் புகைப்படங்களை பிரிண்ட் எடுக்கும் - என்லார்ஜர் (Enlarger) முதலிய









கருவிகளைக் கொண்ட சிறிய புகை படங்கள் கழுவும் Dark Room இருந்தது

## சிவநாயகத்தின் பங்கு

இரவிரவாக ஒரு சில நாள்களில் தபால் முத்திரைகளுக்கான படங்கள் சிவநாயகம்அவர்களால் வரையப்பட்டன. அந்த நாள்களில் கடிதங்களுக்கு பத்துச் சத முத்திரையும், போஸ்காா்ட்டுக்கு மூன்று சத முத்திரையும் ஒட்டப்படவேண்டியிருந்தது. எனவே பத்துச்சத முத்திரை, மூன்று சத முத்திரைக்கென இரு வடிவங்கள் வரையப்பட்டன.

முத்திரைகளில் 'தமிழரசு' என்ற வார்த்தையும் 'தபால்' என்ற வார்த்தையும் இருந்தன. வரையப்பட்ட முத்திரை மாதிரிகளை வீட்டிலேயே படம் எடுத்து, வீட்டிலேயே கழுவி, அச்சு எடுப்பதற்கு 'புரோமைட்' பிரிண்ட் எடுக்கப்பட்டது.

இரவோடு இரவாக, சிவநாயகம் அவர்களின் நண்பர் மருதானையிலுள்ள இன்று பிரபலமாகவுள்ள ஒரு 'புளொக் தயாரிப்பாளரிடம் கொண்டு சென்றார். புளொக் தயாரிப்பாளர், முழு சிங்களவரா கையால் இந்த புளொக் பற்றி அதிக கவனம் செலுத்தாமல் செய்து கொடுத்தார். புளொக்குகள் கொண்டு கட்ட அச்சடித்த முத்திரைத்தாள்கள் தடை யாழ்ப்பாணம் சென்றன.

1961 ஆம் ஆண்டு, ஏப்பிரல் 14 ஆம் திகதி யாழ் தமிழரசு தபால் கந்தோரிலிருந்து - பிரதான தபால் அதிகாரியாக தந்தை செல்வா செயற்பட்டார். 10 சத தமிழரசு முத்திரைகளை உடுப்பிட்டி பிரதிநிதி மு.சிவசிதம்பரத்திற்கு முதலாவதாக விற்பனை செய்து சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பித்தார்.

## பியோன்களாக சிவா, நவரத்தினம்

தொடர்ந்து தபால் சட்டங்களை மீறும் செயலாக உடுப்பிட்டி எம்.சிவசிதம்பரமும், சாவகச்சேரி வி.என். நவரத்தினமும் தபால் விநியோகம் செய்யும் 'பியோன் களாக செயற்பட்டு கடிதங்களை விநியோகம் செய்தனர்.

இந்தத் தபால் சேவை சட்ட மறுப்பினால் அரசு கலக்கமடைந்தது. பாதுகாப்பு பிரதி அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பாதுகாப்பு அதிகாரிகளோடு உடனடியாக கலந்தாலோசனை செய்தார். விசேட ரயில் ஒன்றில் யாழ்ப்பாணத்திற்கு 300 இராணுவ வீரரும் 10 அதிகாரிகளும் ஏப்ரல் 15 ஆம் திகதி அனுப்பப் பட்டனர்.

ஏப்ரல் 17 ஆம் திகதி இலங்கை முழுவதும் அவசர காலச் சட்டம் அமுல்படுத்தப் பட்டது. அன்றே வர்த்தமானி அறிவித்தல் மூலம் தமிழரசுக் கட்சியும், ஜனதா விமுத்தி பெரமுனையும் தடைசெய்யப் பட்டன.

(07ஆம் பக்கம் பார்க்க



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 143

### 379. தமிழீழ அரசு நிறுவுவதற்கான ஏற்பாடுகள் தொடர்ந்தனவா?

வைகுந்தவாசன், தமிழர் ஒருங்கிணைப்பு குழுவினூடாக அது செய்யப்படவேண்டும் என உறுதியாக இருந்தார். 1981 இல் தமிழ் நாட்டில், மதுரையில் நடந்த சர்வதேச தமிழ் அமைப்புகளின் கூட்டத்தில் பங்குபற்றியபோது, அமிர்தலிங்கம் நாட்டுக்குள் இருக்கும் பயங்கரங்களாலும் அச்சுறுத்தல்களாலும் மக்களைப்பணயம்வைத்து இப்படியான செயல்களை அவசரப்பட்டு முன்னெடுப்பது புத்தியானதல்ல, அது கைவிடப்படவேண்டும் என்று அறிவுறுத்தினார். அதேசமயம் கூட்டணி தனது கொள்கையை - வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் ஏற்றுக்கொண்டதை - விட்டுக் கொடுப்பதென்பதும் அல்ல அதற்காக காலம் வரும் போவது அதனை செய்வோம் என்றும் தெளிவாக்கினார். காலம் வரும் வரை பொறுப்பது அவசியமெனப்பட்டது.

மதுரையில் ஜனவரி 1981 இல் அறிவுறுத்தப்பட்டதை திரும்பவும் ஜுன் 1981 இல் அமிர்தலிங்கம் லண்டனுக்குச் சென்றபோது தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரையும் வைகுந்தவாசனையும் சந்தித்



Jaffna public library with ancient archives and stacks destroyed.

துக் கூட்டணியின் நிலைப்பாடு என மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டது.

ஆனால் வைகுந்தவாசனோ தனது முன்னெடுப்பைக் கைவிடவில்லை. நவம்பர் 1981 இல் வைகுந்தவாசன் ஜனாதிபதி ஜே.ஆருக்கு தமிழர் ஒருங்கிணைப்புக் குழு இடைக்கால தமிழீழ அரசை நிறுவத் தீர்மானம் எடுத்துள்ளதாகவும், சமாதான ரீதியில் ஒரு தீர்வு எட்டப்படாத வரையில் இந்த அரசு அமையும் என்றும், அதாவது, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்கீகாரம் பெற்ற அமைப்பு, அவர்களிடமும் இவை ஆலோசனைக்கு வைக்கப்பட்டன எனவும் குறிப்பிட்டார்.

துள்ளிக் குதித்தார் ஜே.ஆர்..நேரடியாகவும், பிரேமதாஸா மூலமாகவும் அமிர்தலிங்கத்துக்கும் கூட்டணியினருக்கும் தமிழ் மக்கள் 1977இல் எதிர்கொண்ட இனக் கலவரத்தை போல், 1981 இல் யாழ்ப்பாணத்தில் நடந்த அனர்த்தங்களை (யாழ். பொது நூலகம், ஈழநாடு, நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடு, பல கடைகள் எரிக்கப்பட்டவை) போல் திரும்பவும் தூண்டப்போகிறார்களா எனச் சவால்கள் வைக்கப்பட்டன.

மக்களுக்கெதிரே இப்படியான அனர்த்தங்களும் அட்டூழியங்களும் கட்டவிழ்த்து விடப்படுவதை அமிர்தலிங்கமோ கூட்டணியினரோ விரும்பவில்லை. ஆனாலும் சிங்கள மக்கள் பொறுமையிழப்பார்கள், அதனை தங்களால் கட்டுப்படுத்த முடியாது என ஜே.ஆர்., பிரேமதாஸா போன்ற அரசாங்கத் தலைவர்கள் திட்டவட்டமாகச் சொல்லி, தமிழ்ப் பகுதிகளில் இராணுவத்தினர் மேலும் குவிக்கப்பட்டு, பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டன. கூட்டணி திக்குமுக்காடியது.

### 380. கூட்டணியினர் என்ன தீர்மானம் எடுத்தனர்?

மாவட்ட சபைத் தேர்தலுக்கு எதிராக 1981 இல் வாக்களிப்பு நிலையங்களைத் தாக்கி காவலுக்கு நின்ற பொலிஸாரை கொன்றதின் பின்னணியில் உமா மகேஸ்வரனின் புளொட் உறுப்பினர்களும் அவரைச் சார்ந்த விடுதலைப் போராட்டக் குழுக்களும் இருந்தார்கள். ஆதலால் அமிர்தலிங்கத்துக்கும் உமா மகேஸ்வரனுக்கும் திருப்தியான உறவு இருக்கவில்லை. ஆனால் பிரபாகரனது விடுதலைப் புலிகளோடு உறவுகள் சுமாராகவே இருக்க அவர்களின் ஆதரவு வைகுந்தவாசனின் முன்னெடுப்புக்கு எதிராகக் கோரப்பட்டது. அதுவும் ஒத்துக்கொள்ளப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி பின்னர் கூடி நிலைமைகளை ஆராய்ந்து ஏகமனதாக தாங்கள் அப்படியான அரசு அமைப்பதற்கு ஒத்துக்கொள்ளவில்லை எனவும், அதையும் மீறி நிறுவப்பட்டால் அதற்கும் தங்களுக்கும் எதுவும் தொடர்பில்லை எனவும் தீர்மானித்து அவை லண்டன் அமைப்புகளுக்கும், விடுதலைப் புலிகள் ஊடாகத் தெரியப்படுத்தப்பட்டது.

இவை நடந்ததும் வைகுந்தவாசன் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தில் எங்களை அணுகி, அமிர்தலிங்கம் முன்னுக்குப் பின் முரணாக இயங்குகிறார் எனவும், அங்குரார்ப்பண கூட்டத்தில் தமிழீழம் நிறுவுவதற்கு உரிய ஏற்பாடுகள் புலம்பெயரிலேயே நடக்க வேண்டும் என அறிவுறுத்தி விட்டு, தற்சமயம் யாருக்காகவோ இப்படி மாறி நிற்கிறார்கள் என்றும், தங்களது ஏற்பாடுகளுக்கு ஆதரவு



தருமாறு அவரிடம் பேசுமாறும் கேட்டார்.

மேலும் தான் புதுடெல்லியில், உயர் அதிகாரிகளது அனுசரணையோடே இதனை முன்னெடுப்பதாகவும், காரியங்கள் கைகூடும் வரை அவற்றின் பின்னணிகள் பற்றிய விவரங்கள் தெரிவிக்க முடியாதமையை ஒட்டி மனம் வருந்துகிறார் என்றும் சொன்னார்.

இவை அரசியலை ஒட்டிய தீர்மானங்கள் ஆதலால் அவற்றை அவர்களிடமே விட்டுவிட்டோம். அப்பொழுது பிரஜைகள்குழுவின் பால், அக்கறை காட்டி இயங்கிக் கொண்டிருந்து தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகத்திற்கு அனுசரணையாக இருந்த கலாநிதி சிவத்தம்பி போன்றோரும் அதனை விரும்பவில்லை.

கூட்டணியினரின் இந்த நெருக்குவாரங்களால், கடைசி நேரத்தில் 13 ஜனவரி 1982 இல் வைகுந்தவாசன் தனது தற்காலிக அரசு அமைக்கும் திட்டத்தைப் பின்போடுவதாக அறிவித்தார். அதைத் தெடர்ந்து அமிர்தலிங்கம் ஒரு காரசாரமான அறிக்கையைத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவுக்கும் வைகுந்தவாசனுக்கும் எதிராக வெளியிட்டார்.

தமிழ் தேசத்தின் விதியைத் தீர்மானிப்பது அந்த மண்ணின் மக்களேயொழிய பத்தாயிரம் மைல்களுக்கு அப்பால் வாழ்ந்து கொண்டு, தாங்கள செய்வதின் பாதிப்புக்களின் விளைவுகளில் பங்குபற்றாத சில பேரல்ல. ஒருசிலபேர் தங்களது திமிருக்காகவும் அகந்தைகளுக்காகவும. பயங்கரமான எதிர் விளைவுகளையும் அட்டூழியங்களையும் கொண்டு வரக் கூடிய இப்படியான சாகசமான விளையாட்டுகளில் தமிழ்மக்களுக்காகச் செயல்படுவதற்கு அதிகாரம் பெற்றவர்கள் அல்லர். ஒரு நாட்டுக்குள் இருந்துகொண்டே இன்னுமொரு நாடு அமைப்பது என்பதில் உள்ள சிக்கல்களையும் அவற்றின் விளைவுகளையும் உணர்ந்து கொள்ளாத அரசியல் கத்துக்குட்டிகளே இப்படியான சாகச வேலைகளை அவர்களுடைய பெயருக்காகவும் பெருமைக்காகவும் செய்ய முற்படுவார்கள். அவை ஒருபோதும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதில்லை - என்றவாறாக அது அமைந்தது.

எனினும் இவை ஜே. ஆரைத் திருப்திப்படுத்தவில்லை. அவர் இதற்கு ஓர் இராணுவத்தீர்வின் மூலமே முடிவு கட்டலாம் என்ற தன்னுடைய உறுதிப்பாட்டை முன்னெடுத்து அடக்குமுறையின் பிடிகளை இறுக்கினார்.

(வளரும்......)



House and car of Mr. V. Yogeswaran, Jaffna MP, razed as fires burned citywide.

# தனிமைப்படுத்தல் மீறல் மேலும் 376 பேர் கைது

சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரப் பகுதியில் 376 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த கால கட்டத்தில் 18 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேற்படி குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 78 ஆயிரத்து 253 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை சனிக்கிழமை மேல் மாகாணத்துக்குள் உள்நுழைந்த 1,310 நபர்களும், வெளியேற முயன்ற 1,135 நபர்களும் பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது உரிய காரணமின்றி மாகாண எல்லைகளைக் கடக்க முயன்ற 109 வாகனங்களில் பயணித்த 225 நபர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

## தமிழ் ஊடகத்துறையின் .....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு நகரங்களில் பொதுக்கூட்டம், ஊர்வலம் என்பன தடைசெய்யப்பட்டன. ஏப்ரல் 17 நள்ளிரவிலிருந்து யாழ்ப்பாண நகரசபை திருகோணமலை நகர சபை, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் நகர சபை எல்லைக்குள் ஊரடங்குச் சட்டம்பிரகடனப்படுத்தப்பட்டது.

இலங்கை இராணுவ கமாண்டர் மேஜர் ஜெனரல் விஜயக்கோன் ஏப்ரல் 17 ஆம் திகதி யாழ்ப்பாணம் பறந்து சென்று அமைதியை நிலைநாட்டும் நடவடிக்கைக்குத் தலைமையை ஏற்றார்.

**ஸ்ரீமாவின் குற்றச்சாட்டு**

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, அன்று வானொலியில் நாட்டு மக்களுக்கு அமைதி பேண வேண்டி வெளியிட்ட செய்தியில், தமிழரசுக்கட்சியின் கோரிக்கைகள் நியாயமற்றவை. தமிழரசுக் கட்சி சட்டத்துக்கு விரோதமாக தபால் சேவையையும், பொலிஸ் சேவையையும் நடத்துகிறது. அவர்கள் காணிக் கச்சேரிகளை தம்முனைப்பில் நடத்தித் தமது ஆதரவாளர்களுக்குக் காணிகளை விநியோகிக்க உள்ளார்கள். இப்படியாக இலங்கையின் நியாயாதிக்குட்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட அரசினை எதிர்ப்பதன் மூலம், தனி அரசு ஒன்றை ஸ்தாபிக்க அவர்கள் உள்ளார்கள் என்பது சந்தேகமறத் தெரியவருகின்றது என்றார்.

சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பித்து 4 நாள்களின் பின்னர், ஏப்ரல் 18 ஆம் திகதி இலங்கை இராணுவத்தின் 'சிங்ஹ' படைப்பிரிவினர், அமைதியாகச் சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருந்த தலைவர்களையும், தொண்டர்களையும் ஆயுதங்கள் கொண்டு தாக்கிக் கலைத்தார்கள். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒவ்வொரு பிரிவுக்கும், இராணுவ அதிகாரிகள் பொறுப்பாக நியமிக்கப்பட்டனர். கச்சேரிகள் இராணுவத்தின் வசமாகின. 'சிங்ஹ' படைப்பிரிவின் மேஜர் உடுகம யாழ்ப்பாணக் கச்சேரியின் அதிகாரியாகச் செயற்பட்டார்.

பாதுகாப்புத்துறை செயலர் என்.கியூ.டயஸின் உத்தரவில் தந்தை செல்வா உட்பட தமிழ்த் தலைவர்கள், ஆதரவாளர்கள் 90 பேர் கைது செய்யப்பட்டு பனாகொடை இராணுவ முகாமில் காவலில் வைக்கப்பட்டனர். ஆறுமாதகாலம் காவலில் இருந்த இவர்கள் 1961 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 4 ஆம் திகதி விடுவிக்கப்பட்டனர்.

**பாலாவின் கருத்து**

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தனது 'விடுதலைப் புலிகளும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்' என்ற நூலில் இந்த நிகழ்வை இவ்வாறு சொல்கிறார்.

"சாத்வீக வாதிகள் பலாத்காரமான முறையில் ஒடுக்கப்பட்டனர். தமிழரின் அஹிம்சைப் போராட்டம் சிங்களப் பேரினவாதிகளின் ஆயுத பலத்தால் ஒடுக்கப்பட்டது. இந்த வரலாற்றுச் சம்பவம் தமிழ் தேசியப் போராட்டத்திற்கு ஓர் அரசியல் ஆரம்பமாக இருந்தது".

அதுதான் உண்மை !

- இப்படி முடிகிறது அந்தக் கட்டுரை. அந்தக் கட்டுரையில் கூறப்பட்டவாறு தமிழ் தேசியப் போராட்டத்தின் ஆரம்பமாக அமைந்த சத்தியாகிரக எதிர்ப்பு நடவடிக்கையில் தமிழரசு முத்திரையை மிகச் சிறப்பாகக் கலை நயத்துடனும் மூன்றாம் நபருக்குத் தெரியாமல் மிக இரகசியமாக தயாரித்து போராட்டகளத்துக்கு அனுப்பியவர் எஸ்.டி. சிவநாயகம் ஐயாதான்.

(வளரும்....)

# வர்ண இராமேஸ்வரனுக்கு ஈழத்திலிருந்து அஞ்சலிகள்!

## இலங்கை நெய்தல் நூற்றல் ஆலை பணிப்பாளர் சபை தெரிவிப்பு



வெறும் வாய்ச்சொல் வீரர்கள் போலன்றி தாயகத்தில் யுத்தத்தால் வீழ்த்தப்பட்ட அடித்தட்டு மக்களது வாழ்வியலைக் கட்டியெழுப்புவதன் மூலமே கனவுகளை மெய்ப்பிக்கலாமென செயற்பட்டவர் வர்ண இராமேஸ்வரன் என வடமாகாணத்தின் முன்னணி ஆடை தொழிற்சாலையான இலங்கை நெய்தல் நூற்றல் ஆலை பணிப்பாளர் சபை தெரிவித்துள்ளது.

கொரோனா பெரும் தொற்றின் மத்தியில் தாயகத்தில் தங்கியிருந்த ஈழப்பாடகன் வர்ண இராமேஸ்வரன் வெறுமனே வீட்டினுள் முடங்கியிருந்தவரல்லர்.

வடமராட்சியின்வல்லையில் இயங்கிவரும் இலங்கை நெய்தல் நூற்றல் ஆலையை மேலும் மேம்படுத்தி நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதே வர்ண இராமேஸ்வரனது நோக்கமாகவிருந்தது.

கொரோனாத் தொற்றால் ஆலை முடங்கிவிடாதிருக்க நாள்தோறும் பயணித்த இராமேஸ்வரன் பணியாளர்களுக்கு நம்பிக்கையூட்ட நாள் கணக்கில் தங்கியிருந்து ஆலோசனைகளை வழங்கியமையையும் இலங்கை நெய்தல் நூற்றல் ஆலை பணிப்பாளர் சபை நன்றியுடன் நினைவுகூருகின்றது.

இலாப நோக்கற்ற ஆலையை வலுப்படுத்தவும் இலாபத்தை பணியாளர்களுக்கு பங்கிட்டு கொடுக்கவேண்டுமெனவும் முன்னின்று இராமேஸ்வரன் பாடுபட்டிருந்தார்.

தாயகத்திலுள்ள தனது வயோதிப தாயாரை ஒருபுறம் பாதுகாத்தவாறு கலைகளுக்கான அக்கடமியொன்றை யாழில் கட்டியெழுப்பிக்கொண்டிருந்த அவர் கனடாவிலுள்ள தனது குடும்பத்தை மீண்டும் தாயகம் அழைத்து வரவும் ஆர்வம் கொண்டிருந்தார்.

ஆனாலும் விதி வலியது. கனவுடன் கனடாவிற்குள் தரையிறங்கிய ஈழப்பாடகனை பெருந்தொற்று பலியாக்கி விட்டது.

ஈழத்தின் வாழ்வியலுடன் பிரிக்க முடியாத கானங்களை தந்த ஈழப்பாடகன் நம்மிடம் உயிரோடு தற்போதில்லை. ஈழப்பாடகன் வர்ண இராமேஸ்வரனின் கனவுகள் மெய்ப்பிக்கப்படவேண்டுமென இலங்கை நெய்தல் நூற்றல் ஆலை பணிப்பாளர் சபை விடுத்துள்ள நினைவஞ்சலி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஓட்டமாவடி மஜ்மா நகரில் 3,003 உடல்கள் நல்லடக்கம்

(எச்.எம்.எம்.பர்ஸான்)




கொரோனாத் தொற்றால் மரணிக்கும் நபர்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி - மஜ்மா நகர் மையவாடியில் கடந்த சனிக்கிழமை நல்லடக்கம் செய்யப்பட்ட 11 உடல்களுடன் மொத்த எண்ணிக்கை 3,003 ஆக உயர்ந்துள்ளது என்று ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நெளபர் தெரிவித்தார்.

கடந்த மாதத்துடன் ஒப்பிடும்போது இம்மாதம் குறைந்த அளவிலான உடல்கள் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. நாட்டிலுள்ள அனைத்து இன மக்களின் உடல்களுடன் மூன்று வெளிநாட்டுப் பிரஜைகளின் உடல்களும் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன என்று தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

# மடு - கோவில் மோட்டை காணி விவகாரம்; ஊடகவியலாளர் வீட்டின் மீது தாக்குதல்!





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப்.26

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பண்டிவிருச்சான் பகுதியைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டின் மீது கடந்த சனிக்கிழமை இரவு இனம்தெரியாத குழு ஒன்று தாக்குதலை மேற்கொண்டது.

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கோவில் மோட்டை காணி தொடர்பான பிரச்சினை நீண்ட காலமாக இடம்பெற்று வந்துள்ளது.

இந்தநிலையில்சனிக்கிழமைவிவசாயக்காணிகளை உழவு செய்ய முற்பட்ட சமயம் கோவில் மோட்டை விவசாயிகளுக்கும், அருட்தந்தை உள்ளடங்கலான குழுவினருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஊடகவியலாளர் மேற்படி விடயத்தை அறிக்கையிட்டதுடன் இந்தச் சம்பவம் தொடர்பாக உரிய நிலைப்பாட்டை தெரிவிக்குமாறு அருட்தந்தையிடம் கோரியுள்ளார்.

எனினும் அருட்தந்தை விளக்கம் கொடுக்க மறுத்துள்ளார். இந்த நிலையில் ஊடகவியலாளர் நேரடியாக சம்பவ இடத்தில் இருந்து சேகரித்த தகவலின் அடிப்படையில் செய்தியை ஊடகங்கள் ஊடாக வெளியிட்டார்.

செய்தி வெளியாகிய நிலையில் கோவில் மோட்டை விவசாயிகளுடன் தர்க்கத்தில் ஈடுபட, அப்பகுதி அருட்தந்தை தொலைபேசி ஊடாக அந்த ஊடகவியலாளரை அச்சுறுத்தும் விதமாக பேசியமையுடன் தான் யார் என்பதைக் காட்டுகிறேன் என்று தொலைபேசியில் தெரி வித்துள்ளார்.

தொலைபேசியில் அச்சுறுத்தியமையுடன் நிறுத்தாமல் சனிக்கிழமை இரவு மேற்படி ஊடகவியலாளர் பண்டிவிரிச்சான் பகுதியில் உள்ள தனது வீட்டில் இல்லாத நேரத்தில் அவருடைய வீட்டை சூழ்ந்து கொண்ட இனம் தெரியாத நபர்கள், வீட்டின் மீது கற்களை வீசி தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இந்த விடயத்தை அறிந்த அப்பகுதி மக்கள் ஒன்று திரண்ட நிலையில் அக்குழுவினர் அப்பகுதியில் இருந்து தலைமறைவாகி உள்ளனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் உடனடியாக மடு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளமையோடு, தனக்கு தொலைபேசியில் அச்சுறுத்தல் மேற்கொண்ட அருட்தந்தை மற்றும் தாக்குதலை மேற்கொண்ட குழுவினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளக் கோரிக்கை விடுத்துள்ளார்.



இன்று உலக சுற்றுலா தினம்

கலாநிதி திருமதி சுபாஜினி உதயராசா
சிரேஷ்ட விரிவுரையாளர்
புவியியற்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# உலகளவில் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் சுற்றுலாத்துறை

**அறிமுகம்**

இன்றைய உலகில் சுற்றுலா ஒரு பயன் மிகு தொழிலாக விளங்குகின்றது. ஒரு நாட்டின் கண்ணுக்குத் தெரியாத ஏற்றுமதிப் பொருள் தான் சுற்றுலா. சுற்றுலா மூலம் ஒரு நாடு பல்வேறு வழிகளில் பயன் பெறுகிறது. இதன் மூலம் நாட்டின் தேசிய வருமானம் அதிகரிக்கின்றது. இதனால் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து பல துறைகளில் முன்னேறுகிறது.



சுற்றுலா மூலம் நாடுமட்டுமல்லாது தனிநபரும் பயன் அடைகின்றார். சுற்றுலா பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த துறையாக இருப்பதுடன் சமுதாய முக்கியத்துவமும் பெற்றுள்ளது. சுற்றுலாவானது சமுதாயத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தி சமுதாய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுகின்றது. சுற்றுலா என்னும் சொல் அதாவது Tour என்னும் ஆங்கிலச் சொல் TORNUS என்னும் இலத்தின் மொழிச் சொல்லிலிருந்து பிறந்தது. Tornus என்றால் சக்கரம் எனவே இச்சொல் சுற்றிவருவதைக் குறிக்கிறது. இன்பப் பொழுதுபோக்கிற்காகப் பயணம் மேற்கொள்ளுதல் அல்லது பயணிகளுக்கு வழிகாட்டுதல், சுற்றுலா மேற்கொள்ளும் பயணிகளுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுத்தல் முதலிய பணிகளைச் செய்யும் தொழிலகம் சுற்றுலா எனப்படும் என பிரித்தானிய கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது. எவரொருவர் எவ்வித குறிக்கோளும் இன்றி தனது நாட்டின் எல்லையைக் கடந்து பிறநாட்டில் தற்காலிகமாகத் தங்கி, தான் வேறு எங்கோ ஓரிடத்தில் ஈட்டிய பணத்தை அங்கு செலவிடுகிறாரோ அவரே சுற்றுலாப் பயணி ஆவார். சுற்றுலாக் கழகம் ஒரு நாட்டில் குறைந்தளவு 24 மணி நேரமாவது பயணம் செய்பவர் சுற்றுலாப்பயணி என வரையறைசெய்துள்ளது.

**சுற்றுலா தினம்**

சுற்றுலாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நோக்கிலும், சுற்றுலாவில் நாட்டின் பொருளாதாரமும் உண்டு என்பதை விபரிக்கும் நோக்கிலும் உலக சுற்றுலாதினம் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தொனிப்பொருளை Theme மையமாகக் கொண்டு கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்தவகையில் உலக சுற்றுலா அமைப்பு UNWTO 2021ஆம் ஆண்டிற்கான உலக சுற்றுலா தினத் தொனிப்பொருளாக உள்ளடக்கிய வளர்ச்சிக்கான சுற்றுலா Tourism for Inclusive என்பதைக் குறிப்பிட்டுள்ளது. சுற்றுலா மூலம் மனித குலத்தை மேம்படுத்தும் வகையில் செப்டெம்பர் 27ஆம் திகதியை உலக சுற்றுலாதினமாக 1970 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்து அறிவித்தது. அவ்வகையில் உலக சுற்றுலா தினம் உலக சுற்றுலா நிறுவனத்தின் WTO ஆதரவில் 1980ஆம் ஆண்டில் இருந்து கொண்டாடப்பட்டு வருகிறது. இப்போது சுற்றுலா என்பதுதான் உலகின் மிகப்பெரிய தொழிலாக உள்ளது. உலக பொருளாதாரத்தில் இரண்டாவது பங்களிப்பு சுற்றுலாவினால் தான் கிடைக்கிறது. உணவகம், தங்குமிடம், பொழுதுபோக்குத் தலங்கள், போக்குவரத்து, வணிக விற்பனையகங்கள் என ஐந்து முக்கிய துறைகளை உள்ளடக்கியது சுற்றுலாத்துறை. உலக அளவில் பல கோடி மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதும் சுற்றுலாதான். சுற்றுலாவை மேம்படுத்தி பொருளாதாரத்தை அதிகளவில் ஈட்டிய நாடுகளில் ஸ்பெயின் முதலிடம், பிரான்ஸ், ஜேர்மனி முறையே இரண்டாவது, மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றன. உலக அளவில் சுற்றுலாவில் சீனா 13வது இடத்திலும், இந்தியா 40வது இடத்திலும் உள்ளன. இந்தியா, இலங்கைபோன்றவளரும்நாடுகளிற்கு மிகப்பெரிய பலமாக இருப்பது சுற்றுலா. வெறும் பாலை வனத்தை மட்டும் வைத்துக்கொண்டுடுபாய்சுற்றுலாவின் மூலம் அதிக வருமானத்தை ஈட்டி வருகிறது. சின்னஞ் சிறிய நாடான சிங்கப்பூர் எந்த விதமான பெரிய வளமும் இல்லாமல் சுற்றுலாவில் உலக நாடுகளிற்கு சவால் விடும் வகையில் மிளிர்கின்றது.

**உலக சுற்றுலா மாநாடு**

1963ஆம் ஆண்டு உரோம் நகரில் ஐக்கிய நாடுகள் சபையில் உலக சுற்றுலா மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. வளர்ந்து வரும் நாடுகள் சுற்றுலாத் துறைக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்துச் சுற்றுலாத் துறையை வளர்க்க வேண்டும்.
2. வளர்ந்து வரும் நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு நிதியிலிருந்து நீண்ட காலத் தவணையிலும் குறுகிய காலத்திட்டத்திற்கும் கடன் பெறலாம்.
3. உலகம் முழுவதும் சுற்றுலா செல்வோரின் எண்ணிக்கை பெருகிக் கொண்டு வருகிறது. மக்கள் புதிய சுற்றுலா மையங்களிற்குச் செல்ல ஆர்வம் கொண்டுள்ளனர். எனவே ஒவ்வொரு நாடும் புதிய சுற்றுலா மையங்களை உருவாக்க வேண்டும் என்று அறிவுரை கூறியது. மலையேறுதல், குளிர்கால விளையாட்டுக்கள், மீன் பிடித்தல், வேட்டையாடுதல், கடற்கரைகள், மருத்துவ குணமுள்ள நீரூற்றுக்கள், தேசிய பூங்காக்கள், விளையாட்டுக்கள், பறவை, விலங்குகளின் சரணாலயங்கள், தேசிய நினைவுச்சின்னங்கள், அந்நாட்டு மக்களின் பழக்கவழக்கங்கள், நாகரிகம், பண்பாட்டுச் சின்னங்கள், புனிதப் பயணம் மேற்கொள்ளல், திருவிழாக்கள் போட்டி விளையாட்டுக்கள் என்பவற்றை மிகுதிப்படுத்த வேண்டும்.

**சுற்றுலா வகைகள்**

சுற்றுலாவின் பிரதான வகைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். மருத்துவ சுற்றுலா, குளிர்கால சுற்றுலா, தன்னார்வ சுற்றுலா, அனுபவங்களின் சுற்றுலா, நீர் சுற்றுலா, நிலையான சுற்றுலா, கோடை அல்லது சூரியன் மற்றும் கடற்கரை விடுமுறை சுற்றுலா, ஆரோக்கிய சுற்றுலா, கடைசி வாய்ப்பு சுற்றுலா, கலாசார சுற்றுலா, தொல்பொருள் சுற்றுலா, மத சுற்றுலா, யாத்திரை சுற்றுலா, கலாசார பாரம்பரிய சுற்றுலா, வெகுஜன சுற்றுலா, சாகச பயணம், வேளாண் சுற்றுலா, முக்கிய சுற்றுலா, விளையாட்டுச் சுற்றுலா, வணிக சுற்றுலா, வனவிலங்கு சுற்றுலா, மது சுற்றுலா, இசை சுற்றுலா, விசாலமான சுற்றுலா, சைக்கிள் ஓட்டுதல், திரைப்பட சுற்றுலா, இன்பச் சுற்றுலா, கல்விச் சுற்றுலா, அரசியல் சுற்றுலா, சங்கச் சுற்றுலா, ஓய்வுச் சுற்றுலா, சூழலியல் சுற்றுலா, கடற்கரை சுற்றுலா, போன்றனவாகும். இவற்றினை உள்நாட்டுச் சுற்றுலா, வெளிநாட்டுச் சுற்றுலா என இரு பெரும் பிரிவிற்குள் உள்ளடக்கலாம்.

**சுற்றுலாவினால் ஏற்படும் நன்மைகள்**

அயல் நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் நம் நாட்டில் செலவிடும் பணம் புலனாகாத ஏற்றுமதியாகும். வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காகவும், உணவிற்காகவும், போக்குவரத்திற்காகவும், பொருள்களை வாங்கவும் செலவு செய்யும் தொகையானது அந்த நாட்டிற்கு அந்நியச் செலவாணியாகக் கிடைக்கின்றது. இந்த அந்நியச் செலவாணி மூலம் பாதகமான வணிகச் சமநிலையையும் சமாளிக்க முடிகிறது. இந்த வகையில் சுற்றுலா மூலம் கிடைக்கும் வருவாய் ஒரு நாட்டிற்கு வரப்பிரசாதமாகவே உள்ளது. சுற்றுலாவின் மூலம் அந்நிய செலவாணியை ஈட்டுவதில் இந்தியா இரண்டாவது இடம் வகிக் கிறது.

**தேசிய வருமானம் அதிகரிக்கிறது**

சுற்றுலா மூலம் ஒவ்வொரு நாடும் பல வழிகளில் வருமானம் பெருக்குகின்றது. பொருள்களை உற்பத்தி செய்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விற்பனை செய்வதைக் காட்டிலும் அதிகமான வருமானத்தைச் சுற்றுலாத் துறை தருகிறது. சுற்றுலா அறிஞர்களான லிகோரிஷ், கெர்ஷா ஆகியோர் சுற்றுலா பற்றி பின்வருமாறு கூறுகிறார்கள்.





சுற்றுலா, முதலீடு எதுவும் தேவைப்படாத மிக எளிதான தொழிலாகும். ஒரு சமுதாயம் ஆண்டு முழுக்க ஒவ்வொரு நாளும் இரண்டு டசின் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்க முடியுமானால் அது பொருளியல் வளர்ச்சியில் ஆண்டிற்கு ஒரு லட்சம் டொலர்கள் ஊதியப்பட்டியல்களைக் கொண்ட ஒரு புதிய தொழிற்சாலையைப் பெற்றுள்ளதற்கு ஒப்பாகும். என்று கூறுகின்றனர்.

(மிகுதி நாளை தொடரும்...)

# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom 39

ஜனனி தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



**வீடியோ கேம் : தடைசெய்யாதீர்கள் சேர்ந்து விளையாடுங்கள்**

தொலைக்காட்சி பார்ப்பதால் கேடும் ஏற்படுகின்றது என்பதற்காக தொலைக்காட்சியைப் பார்க்கக்கூடாது என்று தடைவிதிப்பது இன்றைய நவீன டிஜிற்றல் யுகத்தில் சாத்தியமற்றதாகின்றது. அது பயனளிக்கும் ஒன்றாகவும் இருக்கப்போதில்லை. அதே போன்று தான் மெய்நிகர் வெளியில் வீடியோ கேம் விளையாடுவதையும் வீட்டில் தடைசெய்வது என்பதான முடிவை எடுப்பது ஒரு வகையில் சாத்தியமற்ற ஒரு செயற்பாடாகவே புரிந்து கொள்ளப்படத்தக்கது. ஆகவே வீடியோ கேம் வீட்டின் ஒரு அங்கமாக தவிர்க்க முடியாமல் இருக்கப்போகிறது. அவ்வாறாயின் அந்த நடத்தையை வழிப்படுத்துவது தான் சாத்தியமான ஒருநடவடிக்கையாக இருக்கும் எனலாம். இதற்கான எளிய வழிகளைப் பற்றி இப்போது சிந்திக்கிறார்கள்.

**வீட்டில் வீடியோ கேம் பயன்பாடு பற்றிய விதிகளை வரையறுத்துக் கொள்ளுதல்.**

'இது பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான ஒரு ஒப்பந்தம் ஆகும். அதாவது முதலில் பிள்ளைகள் புரிந்து கொள்ள வேண்டியது 'வீடியோ கேம்கள் ஒரு சலுகை, உரிமை அல்ல' என்பதாகும். சலுகை தவறாகப் பயன்படுத்தப்படும் போது ரத்துச்செய்யப்படலாம் என்பதை இந்த ஒப்பந்தம் உணர்த்தும். வீடியோ விளையாட்டுகளை விளையாடுவதற்கு பெற்றோர்கள் தெளிவான மற்றும் நிலையான விதிகளை நிறுவ வேண்டும். சில அடிப்படை விதிகளை நோக்கலாம்,

1. சிறுவர்கள் வீடியோ கேம்களை விளையாடும் போது அவர்கள் எவ்வளவு நேரம் விளையாட முடியும் என்பது தீர்மானிக்கப்பட வேண்டும்.

2. சிறுவர்களின் கல்வியுடன் தொடர்புடைய வீட்டுப்பாடம் அல்லது வீட்டில் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட வேலைகள் உட்பட வீடியோ கேம்களை விளையாடுவதற்கு முன்பு முடிக்கப்பட வேண்டிய பொறுப்புகள் பட்டியலிடப்பட்டு அவை முடிக்கப்பட வேண்டிய நேர அட்டவணையை தீர்மானித்துக் கொள்ளுதல்.

3. விளையாட்டின் போது சரியான நடத்தை மற்றும் விளையாட்டுத்திறன், வெற்றி மற்றும் தோல்விக்கு எவ்வாறு எதிர்வினையாற்றுவது அல்லது அதனை எவ்வாறு புரிந்து கொள்வது என்பதைப் பற்றி அடிக்கடி உரையாடுவதற்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுதல்.



4. பெற்றோர்கள் வீடியோ கேமை பிள்ளைகளுடன் சேர்ந்து ஒன்றாக விளையாடுவதையும் அவர்களுடன் சேர்ந்து பச்சாத்தாபம் காட்டுவதையும் நிபந்தனையில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதாவது குழந்தைகளுடனான உறவைப் பொறுத்தவரை பெற்றோரின் ஈடுபாடு முக்கியமானது 'வீடியோ கேமைப் போலவே வேறு எந்த விடயத்திலும் இது கடைப்பிடிக்கப்பட வேண்டும். பெற்றோர்கள் இருக்கும்போது அவர்கள் அதில் ஈடுபடும்போது, குழந்தைகளைப் பார்ப்பது மற்றும் நல்ல நடத்தைகளைப் பற்றிப் பேசுவது எளிது. அதனால் அந்த விடயமும் உள்ளடக்கப்பட வேண்டும்.

வீடியோ கேம் விளையாட்டைச் சுற்றியுள்ள விதிகளை அமைப்பது பெற்றோருக்கு சவாலானதாக உணரலாம், அது அவர்களின் குழந்தையின் நலன் கருதிய முக்கியமான செயற்பாடு என்று நினைக்க வேண்டும். இந்த வழிகாட்டுதல்கள் ஒரு குழந்தை அதிக நேரம் விளையாடுவதைத் தடுக்க உதவுகிறது. இவ்வாறு பெற்றோர் தமது ஈடுபாட்டைக் காட்டத் தவறும் போது, பிள்ளைகள் தூக்கமின்மை, உணவில் நாட்டமின்மை ஒட்டுமொத்த மகிழ்ச்சியற்ற தன்மை, மனச்சோர்வு போன்ற பாரிய விளைவுகளின் பின்னரே அதில் கவனம் செலுத்த வேண்டியிருக்கும். விளையாடுவதற்கு ஒரு வரம்பை வைப்பது பிள்ளைகளின் நடத்தை மீதான எதிர்மறை விளைவுகளைத் தடுக்க உதவுமெனலாம். வரம்புகளை அமைக்க மற்றும் சுய கட்டுப்பாட்டைக் கற்றுக்கொள்ள சிறுவர்களுக்கு பெற்றோரின் உதவி தேவை.'

எவ்வளவு விரைவில் விதிகள் நிறுவப்படுகிறதோ அந்தளவிற்கு அது நன்மை பயக்கும். பிள்ளைகள் தம்பாட்டில் விளையாடத் தொடங்கிய பிறகு வீடியோ கேம்களுக்கு வரம்புகளை நிர்ணயிப்பது கடினம் எனலாம். பெற்றோர்கள் தாம் உடன்பட்ட விடயங்களுக்கு தாம் கட்டுப்பாடுடையவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் அவ்வாறு நடந்து கொண்டால் அவர்கள் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக இருப்பார்கள்.

இங்கு பெற்றோர்கள் பிள்ளைகளின் மீது பச்சாத்தாபம் காட்டுவது அடிப்படையாகும். இங்கு முக்கியமானது மற்ற ஊடகங்களைப் போலவே வீடியோ கேம்களையும் பார்க்க வேண்டும். மேலும் விளையாட்டில் வெற்றிபெறும்போது அல்லது தோற்கும்போது எப்படி உணருகிறீர்கள் என்பது உட்பட சில சூழ்நிலைகள் மற்றும் கற்றுக் கொண்ட பாடங்களைப் பற்றி பேசுவதற்கான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

விளையாட்டில் ஒரு கதாபாத்திரத்தை காயப்படுத்தும்போது அல்லது வேறொருவரை காயப்படுத்தும் போது எப்படி உணர்கிறது என்பதைப் பற்றி பேசலாம். அந்த விடயத்தை நிஜ உலகில் எப்படி உணரப்படுகின்றது என்பதை ஒப்பிட்டுப் பேசுவது சிறந்தது. ஒரு குடும்பமாக சமூக மதிப்புகளை குழந்தைக்கு நினைவூட்டலாம்.

உண்மையில் வீடியோ கேம்கள் நிறைய உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றன - உற்சாகத்திலிருந்து விரக்தி வரை, அதில் உள்ளது. நல்ல விளையாட்டுத்திறன் பற்றிப் பேசலாம். அதாவது வெற்றியாளராகவோ அல்லது தோல்வியுற்றவராகவோ இருக்கின்ற போது வரம்புகளை அறிந்துகொண்டு, விளையாட்டை நிறுத்திவிட்டு விலகிச்செல்லும் மனத்திடத்தை பிள்ளைகளிடம் வளர்க்க முயற்சிக்கலாம். மிகவும் விரக்தியடையும் போது விலகிச் செல்லும் துணிவு வீடியோ கேமில் அவசியமாகும்.





இந்தக் கட்டுப்பாடுகளை செயற்படுத்தும் போது குழந்தைகள் தங்கள் உணர்ச்சிகளை எவ்வாறு ஒழுங்குபடுத்துவது மற்றும் அன்றாட வாழ்க்கையில் அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அறிய உதவுகிறது,

விளையாட்டுகளில் வன்முறை பற்றி பெற்றோர்கள் வீட்டில் கவலைப்படும்போது, குழந்தைகள் அவற்றை கேட்க அதிக வாய்ப்புள்ளது, ஏனெனில் இது அனுபவம் மற்றும் புரிதலின் இடத்திலிருந்து வருகிறது. அதனால் அது பிள்ளைகளாலும் புரிந்து கொள்ளப்படும்.

பெற்றோர்கள் வீடியோ கேமில் தங்கள் பிள்ளைகள் அடிமையாகும் அறிகுறிகளைக் கண்டால், தங்கள் குழந்தை அடிக்கடி விளையாடுகிறார்கள் மற்றும் அது அவர்களின் நடத்தையை பாதிக்கிறது என்று நினைத்தால் உரிய ஆற்றுப்படுத்தலை நாட வேண்டும்.

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். பல்கலை மாணவரால் நினைவேந்தல் அனுஷ்டிப்பு



ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உணவு தவிர்ப்பில் ஈடுபட்டு உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களால் அனுஷ்டிக்கப்பட்டது.

பிரத்தியேகமான இடமொன்றில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படத்துக்கு மலர் தூவி மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

பல்வேறு விதமான தடைகளையும் தாண்டி திலீபனுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

# சந்திம எம்.பிக்கும் கொரோனா உறுதி

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடிக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

நோய் அறிகுறிகள் தென்பட்டதால் கரப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனையின்போது அவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து அவர் ஹிக்கடுவையில் உள்ள தனிமைப்படுத்தல் மையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

## சிவாஜிலிங்கமும் தியாகதீபத்துக்கு அஞ்சலி



தியாக தீபம் திலீபனின் 34ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றன.

இந்நிலையில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் தியாக தீபம் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு, அவருக்கு அஞ்சலி செலுத்தினார்.

வல்வெட்டித்துத்துறையிலுள்ள அவரது அலுவலகத்தில், திலீபனின் உயிர் பிரிந்த நேரமான காலை 10.48 மணிக்கு சுடரேற்றி, மலர் தூவி எம்.கே.சிவாஜிலிங்கம் அஞ்சலி செலுத்தினார்.

இதேவேளை அவரது அலுவலகத்துக்கு முன்பாக பெருமளவான பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் சூழ்ந்திருந்த நிலையில், அலுவலகத்தினுள் சிவாஜிலிங்கம் அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வலி.கிழக்கு தவிசாளர் திலீபனுக்கு அஞ்சலி!



*யாழ்ப்பாணம், செப். 27*

*தியாகதீபம் திலீபனின் 34 ஆவது நினைவேந்தலை வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், தனது குடும்பத்தினருடன் சுகாதார நடைமுறைக்கு அமைய, ஈகைச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தியுள்ளார்.*

# உயிரிழந்த ஊடகவியலாளருக்கு வவுனியாவில் அஞ்சலி நிகழ்வு



கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்த சிரேஷ்ட ஊடகவியலாளரும் தமிழ் பற்றாளருமான பீ.ஏ.அந்தோனி மார்க்குக்கு, கடந்த சனிக்கிழமை வவுனியாவில் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட குறித்த அஞ்சலி நிகழ்வில், அவரது திருவுருவப் படத்துக்கு ஒளிதீபம் ஏற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

மேலும், அவர் தொடர்பான நினைவுரையை வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் சு.வரதகுமார் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் ந.கபிலநாத் ஆகியோர் நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.09.2021 இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர்
Kalaikkathir

# புதுக்குடியிருப்பு றோ.க.த.கவில் முதல்முறை இரு மாணவர்கள் 9ஏ சித்தி பெற்றுசாதனை

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலய வரலாற்றில் முதன் முறையாக இரு மாணவர்கள் க.பொ.த சாதாரணதர பரீட்சையில் 9 ஏ சித்தி பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் பலர் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

சுதர்சன் வேணுயா, அன்பழகன் மீனுயா ஆகிய இரு மாணவர்களே 9 பாடங்களிலும் ஏ தர சித்தி பெற்றுள்ளார்கள்.

மேலும் 47 மாணவர்களுக்கு மேல் உயர்தரம் கற்கக்கூடிய பெறுபேற்றைப் பெற்றுள்ளார்கள்.

கொவிட் - 19 தாக்கத்தால் பாடசாலைகள் முடக்கப்பட்ட நிலையிலும் மாணவர்களின் முயற்சி மற்றும் ஆசிரியர்கள் அதிபரின் வழிகாட்டல், பழைய மாணவர்களின் ஒத்துழைப்பு, பெற்றோர்களின் ஒத்துழைப்பு என்பவற்றுடன் மாணவர்கள் தொடர்ச்சியான கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டு சாதித்துள்ளனர்.

## வவுனியாவில் கோர விபத்து மூவர் வைத்தியசாலைகளில்!

வவுனியா, ரயில் நிலைய வீதியில் இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

வவுனியா நகரில் இருந்து ரயில் நிலைய வீதி ஊடாக சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றும், சைக்கிள் ஒன்றும் கட்டுப்பாட்டை இழந்து ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

குறித்த விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரும், சைக்கிளில் பயணித்த முதியவர் ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மூவரும் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பாக வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பதிவு செய்யப்படாத தனியார் சொத்துக்களை பதிவு செய்க

### கொழும்பு மாநகரசபை அறிப்பு

கொழும்பு மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் பதிவு செய்யப்படாத தனியார் சொத்துக்களை பதிவு செய்யுமாறு உரிமையாளர்களுக்கு கொழும்பு மாநகரசபை அறிவித்துள்ளது.

கொழும்பு மாநகர ஆணையாளர் ரோனி திஸாநாயக்க, சொத்தின் உரிமையைப் பாதுகாக்க மாநகர சபையின் கீழ் சொத்துகளை பதிவு செய்வது அவசியம் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் மாநகரசபையின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் இதுவரை பதிவு செய்யப்படாத சொத்துக்கள் பற்றிய தகவல்களை பெற முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### நீதி அமைச்சர் அலி சப்ரி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த நீதி அமைச்சர்,

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, அநுராதபுரம் சிறைச்சாலையில் தம்மை முழந்தாளிடச் செய்து துப்பாக்கி முனையில் அச்சுறுத்திய சம்பவமானது இன ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஒன்று அல்லவென தமிழ் அரசியல் கைதிகள் புரிந்துகொண்டுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பான விசாரணைகளில் தேவையற்ற அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவில்லை.

மனித உரிமைகள் ஆணைக்குழு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்தபோது, சிறைச்சாலை அதிகாரிகளோ அல்லது வேறு தனிநபர்களோ அழுத்தங்களைப் பிரயோகித்தார்களா என்பது தொடர்பில் தமிழ் அரசியல் கைதிகளிடம் விசாரித்தேன்.

எனினும், யாரும் தமக்கு அழுத்தம் கொடுக்கவில்லை என தமிழ் அரசியல் கைதிகள் என்னிடம் கூறினர். ஆகவே, இந்த சம்பவத்தை அரசியல் ஆக்க வேண்டிய தேவையில்லை.

தமிழ் அரசியல் கைதிகளுக்குச் சிறைச்சாலையில் பாதுகாப்பு தொடர்பிலோ, வசதிகள் தொடர்பிலோ பிரச்சினை இல்லை என்றே கூறினர். தமது சொந்த இடங்கள் அருகில் இருப்பதாலேயே அவர்கள் யாழ்ப்பாணத்துக்குச் செல்ல வேண்டும் என்று கோருகின்றனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் பாதுகாப்பு பிரச்சினை இருக்குமாக இருந்தால், உயர் பாதுகாப்பு இடத்துக்கு அனுப்ப முடியும் என்று தமிழ் அரசியல் கைதிகளிடம் நான் கூறினேன் - என்றார்.

### நாட்டைத் தாரைவார்க்கும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து சக்திகளும் ஒன்றிணைந்து மக்கள் அரண் ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய அரசு தேர்தலுக்கு முன்னர் முன்வைத்த சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தை கிழித்தெறிந்து, நாட்டைக்காட்டிக்கொடுக்கும் திட்டத்தையே செயற்படுத்தி வருகின்றது.

அதுமாத்திரமின்றி, கெரவலப்பிட்டி யுகதனவி மின்நிலையத்தை அரசு இரகசியமாக விற்று, சமீபத்திய வரலாற்றில் மிகப்பெரிய துரோகத்தைச் செய்துள்ளது.

எவ்வாறாயினும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நாட்டை மீட்பதற்கான போராட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும் - என்றார்.

### நேற்று தொற்று ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நாட்டில் மேலும் 843 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய இதுவரை 4 இலட்சத்து 54 ஆயிரத்து 532 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

### தாயகத்தில் தடைகளையும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்றன.

அந்தவகையில், கிளிநொச்சியில் ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில், தியாகி திலீபன் வீரச்சாவடைந்த நேரமான முற்பகல் 10.48 மணிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஈகச்சுடரை ஏற்றி அஞ்சலி செலுத்தினார்.

தமிழர் தாயகம் எங்கும் நேற்று தியாகி திலீபனின் நினைவேந்தலைத் தடுக்கும் நோக்கில் இராணுவத்தினரும், பொலிஸாரும், அரச புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டிருந்தனர். சில இடங்களில் நீதிமன்றங்கள் ஊடாக தடை உத்தரவுகளும் பெறப்பட்டிருந்தன. எனினும், இந்தத் தடைகளையும் தாண்டி பல்வேறு இடங்களில் தியாகச் செம்மல் திலீபனுக்கு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

இராசையா பார்த்தீபன் என்ற இயற்பெயர் கொண்ட தியாக தீபம் திலீபன் 1987 ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி 5 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் நீராகாரம் ஏதுமின்றி அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டு 12ஆம் நாளான 26 ஆம் திகதி வீரச்சாவைத் தழுவியிருந்தார்.

### மேலும் 71 பேர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில் பெண் ஒருவர் 30 வயதுக்குட்பட்டவராவார். 6 ஆண்கள், 8 பெண்கள் என 14 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 56 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 26 ஆண்களும், 30 பெண்களும் அடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனாச் சாவுகளின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 680 ஆக அதிகரித்துள்ளது





மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் ‘காலைக்கதிர்’ சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622